வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu


Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    02.03.2026    இதழ் : 56    பக்கங்கள் : 08




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## ஊடகவியலாளர்கள் கொலைகள் குறித்து விசாரிப்பதற்கு ஆணைக்குழு வேண்டும்!

### கொழும்பில் பாரதி இராஜநாயகம் நினைவு நிகழ்வில் ரவூப் ஹக்கீம் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, மார்ச் 02

இலங்கையில் பெரும் எண்ணிக்கையான ஊடவியலாளர்கள் கொலை செய்யப்பட்ட கடந்த காலச் சம்பவங்கள் குறித்து உண்மைகளைக் கண்டறிவதற்கு அரசாங்கம் ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறப்பினருமான ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியமும் லண்டன் - இலங்கை கலை இலக்கிய நிறுவகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மூத்த பத்திரிகையாளர் பாரதி இராஜநாயகத்தின் முதலாவது நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு ஹக்கீம் உரையாற்றினார்.

போர்க்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பல தமிழ் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அதேபோன்று தென்னிலங்கையிலும் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டதுடன் தாக்குதலுக்கும் உள்ளானார்கள். உலகில் ஊடகவியலாளர்களுக்கு படுமோசமான ஆபத்து மிகுந்த நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்கிய

07

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## மைத்திரி, ரணில் உள்ளிட்டோருக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவு!

கொழும்பு, மார்ச் 02

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய, பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

07

## ஈரானின் முன்னாள் ஜனாதிபதி அஹ்மதி நிஜாத் தாக்குதலில் பலி!



தெஹ்ரான், மார்ச் 02

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரானின் மீது நடத்திய வான்வழித் தாக்குதல்களில், அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதி நிஜாத் கொல்லப்பட்டார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி

07

## எரிபொருள் விநியோகம் தடைப்படும் என்று அச்சம் கொள்ளவேண்டாம் என்கிறது 'ஒபெக்'

கொழும்பு, மார்ச் 02

ஈரான் - அமெரிக்கா மோதல் நிலை காரணமாக மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் காரணமாக சர்வதேச ரீதியில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், எரிபொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பெற்றோலிய பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பான "ஒபெக்" அமைப்பு தீர்மானித்துள்ளதால் எரிபொருள் விலை அதிகரிக்கும் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.


ஈரானின் ஹோர்முஸ் நீரிணை ஊடான எரிபொருள் கலங்களின் விநியோகத்தில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக, நேற்று முன்தினம் - பெப்ரவரி 28 முதல் எரிபொருள் மற்றும் எரிவாயு கப்பல் போக்குவரத்து முடங்கியிருந்து.

இதனால், மசகு எரிபொருள் பீப்பாய் ஒன்றின் விலை 73 அமெரிக்க டொலராக உயர்ந்தது.

07

## மத்திய கிழக்கின் போர்ச் சூழல் இலங்கைக்குக் கடும் பாதிப்பு!

### நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச். 02

சர்வதேச ரீதியில் நிலவும் மோதல் போக்குகள் இலங் கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்து பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

07

## மக்களின் வாழ்விடங்கள், காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்!

### அமைச்சரிடம் வடக்கு ஆளுநர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 02

வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் ஆகியவற்றால் கையகப்படுத்தப் பட்டுள்ள மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதாரக் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப் படுத்துமாறு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுற்றாடல் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய சுற்றாடல் சட்டவரைவு திருத்தம் தொடர்பான அறிவூட்டல் மற்றும் கருத்துக் கேள் கலந்துரையாடல், சுற்றாடல் அமைச்சர் கலாநிதி தம்மிக பத பெந்தி பிரசன்னத்துடன்

07

## வெளிநாட்டு இராணுவ விமானங்களுக்கு இலங்கை வான்பரப்பில் அனுமதியில்லை

கொழும்பு, மார்ச் 02

இலங்கை வான்வெளியில் வெளிநாட்டு இராணுவ ஜெட் விமானங்கள் பறக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் பரவிய வதந்திகளை, இலங்கை விமானப்படை நிராகரித் துள்ளது.

ஈரானில் உள்ள இலக்குகளுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள நிலையிலும், உள்ளூரில் வான்வழி நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையிலும், வெளிநாட்டு விமானங்கள் பறக்க அனுமதிக்கப்பட் டுள்ளதாக வதந்திகள் பரவின.

இதனை நிராகரித் துள்ள இலங்கை விமானப்படை , உள்ளூரில் விமான இயக்கங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு , ஏற்கனவே

07

## மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசியல் தலையீடின்றி விசாரணை!

### நீதி அமைச்சர் ஹர்ஷன உறுதி



கொழும்பு, மார்ச் 02

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்கள் தொடர்பில், எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றிச் சட்டத்தின் அடிப்படையில் முறையான விசாரணைகள்

07

## ஈரானில் உள்ள இலங்கையர்களை பாதுகாக்க விரைந்து செயற்படுக!

### அரசிடம் கோருகின்றார் சஜித்



கொழும்பு, மார்ச் 02

இஸ்ரேல் - ஈரான் இடையிலான தீவிர இராணுவ மோதல்களை அடுத்து, ஈரானில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்

07

## எரிபொருள் பதுக்கலை கண்டறிய விசேட சோதனை நடவடிக்கைகள்

கொழும்பு, மார்ச் 02

நாட்டில் தேவையற்ற முறையில் எரிபொருளைப் பதுக்கி வைப்பவர்களைக் கண்டறிவதற்காக பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினரை உள்ளடக்கிய விசேட சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

மத்திய கிழக்கு பதற்றங்களால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் பயன்படுத்தி, எரிபொருளைப் பதுக்கி வைக்கும் நபர்களைக் கண்டறியும் பணிகளில் பாதுகாப்புத் தரப்பினர் தீவிரமாக

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய சட்டத்தை பாதுகாக்கவே புதிய பயங்கரவாத தடைச் சட்டம்

## சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு


யாழ்ப்பாணம், மார்ச் 02

ஏற்கனவே உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை பாதுகாப்பதற்காகவே, அரசாங்கத்தை பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கும் சட்டமூலத்தை அரசு கொண்டுவருவது போல் செயற்படுகிறது என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழில் இடம்பெற்ற, பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தை பாதுகாக்கும் சட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மாறி மாறி வந்த அரசுகள் எவையாக இருந்தாலும் அவர்களுடைய எண்ணங்களும் கொள்கைகளும் ஒன்று தான் என்பதை அநுர அரசும் இப்போது நிரூபித்து இருக்கிறது. தமிழ் மக்களுடைய போராட்டத்தின் உண்மைத்தன்மையை உலகத்திடம் மறைப்பதற்காக அவர்களுடைய காணிகளை இன்னும் விடுவிக்காமல், அரசியல் கைதிகளை இன்னும் விடுவிக்காமல், அவர்களது நிலங்களில் புத்த விகாரைகளை அமைத்துக் கொண்டு வரலாற்று வன்முறை ரீதியான நிகழ்வில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

ஏற்கனவே 47 வருடங்களாக இந்த நாட்டில் 4 இலட்சத்திற்கும் அதிகமான மக்களையும், 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளையும், கோடிக்கணக்கான சொத்துக்களையும் தமிழ் மக்கள் இழந்திருக்கின்றோம். அதனை இன்னமும் தக்க வைப்பதற்காகவே உலகத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றி அரசாங்கத்தை



பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் தடைச் சட்டம் என்ற போர்வையில் புதிய சட்டத்தை அரசாங்கம் கொண்டு வர முயற்சிக்கிறது.

புதிய சட்டத்தில் பயங்கரவாதம் என்றால் என்ன என்பதற்கான வரையறை சொல்லப்படவில்லை.

புதிய சட்டம் என்பது பழைய சட்டத்தைவிட மோசமானது. ஆகவே இந்தச் சட்டத்தை விட முன்பு இருந்த சட்டம் பரவாயில்லை என எமது மக்கள் உணர்வார்கள். அதன் அடிப்படையில் பழைய சட்டத்தை தக்க வைப்பதற்கான நடவடிக்கையில் இந்த அரச ஈடுபடுகிறது-என்றார். (அ-05)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 2 ரிப்பர்களை கைப்பற்றிய பொலிஸார்

கிளிநொச்சி, மார்ச் 02

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பறவைகள் சரணாலய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு ரிப்பர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு குறித்த மணலை, அனுமதிப் பத்திரம் எதுவும் இன்றி இரவு வேளைகளில் வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதாக தர்மபுரம் பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக தர்ம ரம் பொலிஸாரால் நேற்று முன்தினம் அதிகாலை வீதி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, இரண்டு ரிப்பர்கள் மற்றும் உழவு இயந்திரம் ஒன்று பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சாரதிகள் மூவரும் கைது செய்யப்பட்டனர். (அ)

# நாட்டில் சீரான வானிலை

கொழும்பு, மார்ச். 02

நாட்டில் பெரும்பாலும் சீரான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நேற்று அதிகாலை விடுத்துள்ள வானிலை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் அதிகாலை வேளையில் நாட்டின் பல இடங்களில் பனிமூட்டமான நிலை காணப்படலாம் எனவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

(எ)

# கலாசார மண்டப நிறைவுக்கு ரூ. 300 மில்லியன் ஒதுக்கீடு


நிந்தவூர், மார்ச். 02

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிந்தவூர் கலாசார மண்டப கட்டடத்தை நிறைவு செய்வதற்காக 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம் பாவா தெரிவித்தார்.

இதன் ஆரம்ப கட்டமாக நிதி ஆணையம் மூலம் கிழக்கு மாகாண தலைமைச் செயலாளருக்கு திறைசேரி துணைச் செயலாளரினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு ஆதம்பாவா எம்.பி. நன்றிகளை தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டமானது மிக விரைவில் பூர்த்தி செய்யப் பட்டு, மக்கள் பாவனைக்காக கலாசார மண்டபம் கையளிக் கப்படவுள்ளது.(எ)

# காமன் கூத்து விழா



நுவரெலியா, மார்ச். 02

மலையகத்தின் பாரம்பரிய கூத்துக்களில் ஒன்றான காமன் கூத்து விழா பொகவந்தலாவ லெச்சுமி தோட்டம் மத்திய பிரிவு தோட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது ரதி, மதன், சிவபெருமான், இந்திரன், நாரதர், ஈஸ்வரி, சரஸ்வதி, விநாயகர்,

முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய வேடங்கள் தரித்து தேவர் ச[illegible]பயில் மதனுக்கும் ரதிக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு மதனின் கரங்களால் ரதி தேவிக்கு தாலிகட்டப்பட்டது.(எ)

# கட்டைக்காட்டில் நேற்று இலவச மருத்துவ முகாம்




யாழ்ப்பாணம், மார்ச் 02

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் யாழ்.கத்தோலிக்க முன்னணி மருத்துவர்கள் அமைப்பினால் நேற்று இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில், றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் குருதியமுக்க பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை, இதய நோய்களுக்கான ஆலோசனைகள் மற்றும் பரிசோதனைகள், பெண் நோயில் மற்றும் கற்பவதிகளுக்கான ஆலோசனைகள், புற்று நோய் சம்பந்தமான ஆலோசனைகள், பற் சிகிச்சை மற்றும் பற் சீரமைப்பு தொடர்பான ஆலோசனைகள், கண் பரிசோதனை, குழந்தை மருத்துவம், விசேட சத்திர சிகிச்சைக்கான ஆலோசனைகள் போன்ற மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற்றன.

அத்துடன் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது. சுமார் 500 இற்கும் அதிகமானவர்கள் வருகை தந்து பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நாட்டுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில்!

கொழும்பு, மார்ச் 02

தற்போது நாட்டுக்குத் தேவையான போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எனவே பொதுமக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் வரை முன்பதிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் கையிருப்புகள் கிடைப்பதில் எவ்வித தாமதமும் ஏற்படாது எனவும், மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை இந்நாட்டின் எரிபொருள் விநியோகத்திற்குத் தடையாக அமையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் இதனைப் பொறுப்புடன் கூறுகிறோம். எனவே, எரிபொருள் வரிசைகளில் காத்திருப்பதில் எந்தப் பயனும் இல்லை. இன்று நாங்கள் எரிபொருள் விநியோகம் செய்யத் திட்டமிட்டிருக்கவில்லை. (அ)

# பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சாவகச்சேரி நீதிமன்றுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 02

வடக்கிற்கு வருகைதந்துள்ள பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, யாழ்ப்பாணம் - சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு நேற்று காலை விஜயம் செய்தார். அவரோடு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி அந்தோனிப்பிள்ளை யூட்சன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

பிரதம நீதியரசர் அடங்கிய குழுவினரை சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதிகள், பதிவாளர்கள், உத்தியோகத்தர்கள் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

அதனைத் தொடந்து சாவகச்சேரி நீதிமன்ற உத்தியோகத்தர்களுடன் பிரதம நீதியரசர் கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு, அலுவலகச் செயற்பாடுகளையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, பருத்தித்துறை, மல்லாகம் மற்றும் யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்கும் விஜயம் மேற்கொண்டார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.03.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## பயங்கரவாத தடைச் சட்டமும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும்

பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வைத்திருக்கும் பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்ட வரைவு தொடர்பில் பொதுக் கருத்துக் களை தெரிவிப்பதற்கான காலஅவகாசம் பெப்ரவரி 28 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது.

அந்த கால அவகாசம் பரந்தளவிலான விவாதத்துக்கும் கலந்தாலோச னைகளுக்கும் போதுமானதல்ல என்று ஏற்கெனவே மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூக அமைப்புக்களும் சுட்டிக் காட்டியதை கவனத்தில் எடுத்து மேலும் அவகாசத்தை அரசாங்கம் வழங்குமோ தெரியவில்லை. இதுவரையில் சட்ட வரைவு குறித்து முன்வைக்கப்பட்டிருக்கும் பொதுக் கருத்துக்களில் அதிமுக்கியமாக இரு அம்சங்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

முதலாவதாக, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இடம்பெற்று வந்த படுமோசமான அத்துமீறல்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யக்கூடிய ஏற்பாடுகளை தற்போதைய சட்டவரைவு கொண்டிருக்வில்லை என்பது மாத்திரமல்ல, நடைமுறையில் இருக்கும் ஏற்பாடுகளை விடவும் கூடுதல் கடுமையான ஏற்பாடுகளும் புகுத்தப்பட்டிருக்கின்றன.

இரண்டாவதாக, சட்ட வரைவில் பயங்கரவாதத்துக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வரைவிலக்கணம் மிகவும் பரந்ததாகவும் தெளிவற்றதாகவும் இருக்கிறது. ஜனநாயக எதிர்பியக்கங்களையும் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் கூட பயங்கரவாதம் என்று அர்த்தம் கற்பிக்கக்கூடியதாக அந்த வரைவிலக்கணம் அமைகிறது

"நல்லாட்சி" அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 2018 பயங்கரவாத தடுப்புச் சட்டமூலமும் ரணில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 2023 பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும் இதே விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தன. பயங்கரவாத தடைச் சட்டமே தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்யும் சூழ்ச்சித் தனமான நோக்கத்துடன் தான் முன்னையதை விடவும் கொடூரமான ஏற்பாடுகளுடன் கூடிய வரைவுகள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன என்ற சந்தேகம் நியாயமானது.

தேசிய மக்கள் சக்தி தேர்தல்களில் மக்கள் முன்வைத்த விஞ்ஞாபனத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாகவே நீக்கப்படும் என்று வாக்குறுதிளித்தது. அதை பதிலீடு செய்வது குறித்து அதில் எதுவும் கூறப்படவில்லை.

அதிகாரத்துக்கு வந்த பிறகு இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடு முதலில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படமாட்டாது என்கிற அதேவேளை, அது துஷ்பிரயோகம் செய்யப்படவும் மாட்டாது என்று மாறியது. இப்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கான சட்ட வரைவை அரசாங்கம் முன்வைத்திருக்கிறது.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறி பதிலீட்டுச் சட்ட வரைவைக் கொண்டு வருவதற்கான காரணத்தை அரசாங்கத் தலைவர்கள் விளக்கிக் கூறவில்லை. தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டத்தை ஒடுக்குவதற்காகவே பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) அதன் இரண்டாவது கிளர்ச்சியின்போது (1987 - 1990) அந்த சட்டத்தின் கொடூரத்தை உச்ச பட்சத்துக்கு அனுபவித்தது. ஆனால் ஜே.வி.பி.யின் 1971 முதலாவது கிளர்ச்சி பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் எதுவும் இல்லாமல் இருந்த சூழ்நிலையிலேயே கொடூரமான முறையில் நசுக்கப்பட்டது.

# புதிய கல்வி மறுசீரமைப்பில் அரசியல் நோக்கம் இல்லை

### ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச். 02

புதிய கல்வி மறுசீரமைப்பு செயல்முறையின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் கல்வித் துறையுடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

எதிர்கால சந்ததியினருக்காக மேற்கொள்ளப்படும் இந்த புதிய கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் எந்த அரசியல் நோக்கமும் இல்லை என்று சுட்டிக் காட்டிய ஜனாதிபதியின் செயலாளர், இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்க அனைவரின் ஆதரவும் அவசியம் என்று வலியுறுத்தினார்.

முதலாம் தரத்துக்கான புதிய கல்வி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்த ஜனாதிபதியின் செயலாளர், இது தொடர்பில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்கள் குறித்தும் கவனம் செலுத்தினார்.

2026ஆம் ஆண்டின் எதிர்வரும் காலத்துக்கான வேலைத் திட்டங்கள், 2027ஆம் ஆண்டுக்கான தயார்நிலைகள், கல்வி மறுசீரமைப்புகள் தொடர்பாக 25.01.2026 அன்று ஜனாதிபதியுடன் நடை பெற்ற கலந்துரையாடலின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றம் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.(எ)

## போதைப்பொருள் பாவனை:
# பாடசாலை மாணவர்கள் உட்பட 7,950 பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, மார்ச். 02

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுக்கு அடிமையானமை காரணமாக, 2024ஆம் ஆண்டில் 21 வயதுக்குட்பட்ட நபர்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள் 7,950 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன. (எ)

# "சர்ச்சைக்குரிய நிறுவனத்திடமிருந்து நிலக்கரி கொள்வனவு செய்ய முடிவு"

கொழும்பு, மார்ச். 02

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்காக 3 இலட்சம் மெட்ரிக் தொன் நிலக்கரியை அவசர கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை நிலக்கரி நிறுவனத்தால் இதற்காக விலைமனு கோரப்பட்டுள்ளது. அந்த வகையில் ஏற்கனவே தரத்தில் குறைவான நிலக்கரியை இறக்குமதி செய்த நிறுவனத்துக்கு வழங்கியுள்ள விலைமனுவை இரத்து செய்வதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.


கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

மேலும் 5 கப்பல்களில் 3 இலட்சம் மெட்ரிக் தொன் நிலக்கரியை அவசரமாக கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நாட்டுக்கு தரக்குறைவான நிலக்கரியை இறக்குமதி செய்து, பெரும் நஷ்டத்தை ஏற்படுத்திய அந்த நிறுவனத்துக்கு வழங்கியுள்ள விலைமுறியை இரத்து செய்வதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என்பது இந்த தீர்மானத்திலிருந்து மிகத் தெளிவாகிறது.

அந்த விலைமுறி இன்றும் அவ்வாறே காணப்படுகிறது. - என்றார்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 02 திங்கக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 17
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : திரையோதசி




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பணப்பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தி யாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர் களின் தொடர்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக் கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தே கப்படுவதை நிறுத்துங்கள். குடும்பத்தாருடன் ஈகோ பிரச்சினைகள் வந்து நீங்கும். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள்.

**சிம்மம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங் கள் கூட இழுபறியில் போய் முடியும். சிலர் உங்களை தாழ்த்தி பேசினாலும் கலங்காதீர்கள். சகோதரர்களை பகைத்து கொள்ளாதீர்கள்.

**கன்னி**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரச னைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**துலாம்**
மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரி யங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். உற வினர் நண்பர்களால் ஆதாயமும் உண்டு. திடீர் சந்திப்புகள் நிகழும். சாதித்துக் காட்டும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக் கப்படுவீர்கள். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள் வீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உத விகள் கிடைக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவி னர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதிய வர்கள் அறிமுகமாவார்கள்.

# கச்சதீவு இலங்கைக்கானது என்பதில் மாற்றமில்லை

## அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 02

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது. இந்தியாவில் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டால் கச்சதீவு பிரதான பேசுபொருளாகும். கச்சதீவு இலங்கைக்குரியது என்பதில் எந்தவித மாற்றமும் கிடையாது என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

புனித கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவின் ஒரு அடையாளமாக கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் காணப்படுகிறது. இலங்கை மற்றும் ,ந்திய மக்களின் புனித தலமாகவும் கச்சதீவு காணப்படுகிறது.

இந்தியாவில் ஏதேனும் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டால் அங்கு கச்சதீவு ஒரு பிரதான பேசுபொருளாக காணப்படும். இந்திய அரசியல்வாதிகளில் ஒருசிலர் தமது வாக்கு வங்கிக்காக கச்சதீவு பற்றி பேசுவார்கள். அதனூடாகவேனும் தமது வாக்கு வங்கியை தக்கவைத்துக் கொள்ள முயற்சிப்பார்கள்.

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது. இந்தத் தீவை கைப்பற்ற போவதாக இந்திய அரசாங்கம் இதுவரை காலமும் எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்பையும் விடுக்கவில்லை. கச்சதீவு இலங்கைக்கு உரித்தானது என்பதில் எந்தவித மாற்றமும் கிடையாது. கச்சதீவின் அடையாளத்தை இரு நாடுகளும் ஒன்றிணைந்து பாதுகாக்க வேண்டும். இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயல்படும்." என்றார். (எ)

# யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட பிரீமியர் லீக் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச். 02

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்படுகின்ற பிரீமியர் லீக் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் மூன்றாவது தடவையாக நடைபெறவுள்ளது என்று யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் வ. செந்தூரன் தெரிவித்தார்.

"குறித்த போட்டிகளில் 6 அணிகளில் பங்குபற்றுவதற்காக 170 இற்கும் மேற்பட்ட வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இன்னும் மூன்று அணிகளுக்கான உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

ஆவரங்கால், அச்சுவேலி, புத்தூர் அரியாலை, நீர்வேலி, வடமராட்சி, வலிகாமம் மற்றும் தீவகம் ஆகிய அணிகள் சார்பில் வீரர்கள் பங்குபற்ற உள்ளனர்.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட பிரீமியர் லீக் போட்டியானது கிராமங்களில் இருக்கும் கரப்பந்தாட்ட வீரர்களை தேசிய ரீதியில் பிரகாசிப்பதற்கு வாய்ப்புகளை வழங்கும் ஒரு போட்டியாக நடத்தப்பட்டு வருகிறது.

விரைவில் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம்."- என்றார். (எ)

# மணற்காட்டில் சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச். 02

வடபிராந்திய சத்திய சாயி நிறுவகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச சபை இணைந்து மேற்கொண்ட சிரமதான பணி மணற்காடு கடற்கரையில் நேற்றுக் காலை முதல் நடைபெற்றது.

குறித்த சிரமதானத்தின் மூலம் கடற்கரையில் காணப்பட்ட அதிகளவான பிளாஸ்ரிக் கழிவுகள் உட்பட பல கழிவுகள் சேகரிக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச சபையால் அகற்றப்பட்டன.

இதில், சத்திய சாய் சேவா தொண்டர்கள், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,

பருத்தித்துறை பிரதேச சபை ஊழியர்கள், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் அ. அகஸ்ரின், இலங்கை செஞ்சிலுவை சங்க பருத்தித்துறை கிளையினர், மணற்காடு கிராம அபிவிருத்தி சங்கங்கள், பொது அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(எ-08)

# நீர்வேலியில் வீராதி வீரன் பக்தி இசை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச். 02

ஈழத்து பாடலாசிரியர் சாஸ்தாபுத்ர- சிவசிறீ. இரகுநாதக்குருக்கள் கஜதர்ஷனசர்மாவின் வீராதி வீரன் பக்தி இசை வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03. 00 மணிக்கு நீர்வேலி சிறீ வீரபத்திரர் ஆலயத்தில் அல்லாரை செல்வவிநாயகர் ஆலய ஆதீனம் சிவசிறீ நாகேந்திர பாலசுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில், பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தரும், நல்லூர் ஸ்கந்தபதி கலாமன்ற பணிப்பாளர் திருமதி மா. அனந்தலெச்சுமியும் சிறப்பு விருந்தினராக சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறீ து. கு. ஜெகதீஸ்வரக்குருக்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ)

# யாழில் வீதியில் கண்டெடுக்கப்பட்ட கரு தொடர்பில் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச். 02

யாழ்ப்பாணம் நகர் மத்தியில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட கரு தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் சி.சி.ரீவி கமராக்களின் உதவியுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு பின்புறமாக நேற்று முன்தினம் பெண்ணொருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய பின்னர் அங்கிருந்து காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் அப்பகுதியில் சுமார் 6 - 7 மாத கரு வீதியில் காணப்பட்டது.

அதனை அடுத்து அங்கிருந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கரு தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அவ்விடத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய பெண், எங்கேனும் சட்டவிரோத கருக்கலைப்பினை மேற்கொண்ட பின்னர் கரு சிதைவை வீதியில் வீசி சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த நிலையில், சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற யாழ்ப்பாணம் நீதிவான், கரு சிதைவை பார்வையிட்டிருந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகார போக்கு ஒழிக்கப்பட வேண்டும்

## ரவூப் ஹக்கீம் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச். 02

உலகம் முழுதும் ஒரு போர் மேகம் சூழ்ந்திருக்கின்றது. ஒரு வல்லரசு நாடு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அக்கிரமங்களை இழைத்து வருகின்றது. சர்வதேச ரீதியில் சட்டத்தின் ஆட்சி என்பது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. சர்வதேச யுத்தங்களால் இலங்கை போன்ற சிறிய நாடுகளே பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புகளை சந்திக்கின்றன. இந்தநிலையில், இலங்கையில் சர்வாதிகார போக்கு ஒழிக்கப் பட வேண்டும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தின் 75 ஆவது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற வித்தக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# லாப்ஸ் எரிவாயு சிலிண்டர் தடையின்றி விநியோகம்

கொழும்பு, மார்ச். 01

லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயு தொகுதியை ஏற்றிய கப்பல் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்ததாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, குறித்த எரிவாயு தொகுதிகள் சந்தைக்கு துரிதமாக விநியோகிக்கப்படும் என்று அந்த நிறுவனம் தெரி வித்துள்ளது.

வீட்டுப் பாவனையாளர்கள் வழமை போன்று லாப்ஸ் எரிவாயு விற்பனை முகவர்கள் ஊடாக தேவையான சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# திடீரென தீ பரவியதால் பெரும் சொத்து சேதம்!



களுத்துறை, மார்ச். 02

களுத்துறையில் றப்பர் பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையமொன்றுக்கு சொந்தமான கிடங்கில் நேற்று முன்தினம் காலை திடீரென தீ பரவியதால் பெரும் சொத்து சேதம் ஏற்பட்டுள்ளது.

அந்தக் கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஏராளமான றப்பர் பொருட்கள் தீயில் முழுவதுமாக எரிந்து நாசமாகின.

மேலும், கிடங்குக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு ஓட்டோவும், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் தீயில் முற்றாக எரிந்தன.

இந்த நிலையில், களுத்துறை நகராட்சி மன்றத்தின் தீயணைப்புப் படையினர், பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப்படையினர், குடியிருப்பாளர்களின் உதவியுடன் தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தீ அருகிலுள்ள வீட்டுக்கும் பரவும் அபாயம் காணப்பட்டதால் அந்த வீட்டில் உள்ளவர்களும் சில தளபாடங்களுடன் விரைந்து வெளியேற்றப் பட்டனர்.




# துப்பாக்கி சூடு நடத்த முற்பட்டவருக்கு நாற்காலி, வெட்டு கத்தியால் தாக்குதல்

கொழும்பு, மார்ச். 02

வீட்டுக்குள் புகுந்து நபர் ஒருவரை சுட முற்பட்ட இனந் தெரியாத துப்பாக்கிதாரி மீது, அந்த வீட்டின் உரிமையாளர் நாற்காலி மற்றும் வெட்டுக் கத்தியால் தாக்குதல் நடத்தியுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளாகி காய மடைந்தவர் அலவ்வ பகுதியை சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து முறைப்பாட்டாளர் பொலிஸாரிடம் தெரிவிக்கையில், களுத்துறை ரஜவத்த பகுதியைச் சேர்ந்த "பெத்தா" என்பவர் தன்னிடம் பெற்ற 30, 000 ரூபாய் கடனைத் திருப்பித் தருவதற்காக தனது வீட்டுக்கு வந்ததாகவும்,

அப்போது அவருடன் வந்த இனந்தெரியாத நபர் தன்மீது துப்பாக்கிச் சூடு நடத்த முற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

அச்சமயத்தில் தனது வீட்டில் இருந்த நாற்காலி மற்றும் வாளால் அவரைத் தாக்கி விரட்டியடித்ததாக முறைப்பாட்டா ளர் மேலும் தெரிவித்தார்.

தாக்குதலுக்கு உள்ளான அந்த நபரை பொலிஸார் கைது செய்த நிலையில் அவரிடம் இருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 4 தோட்டாக்களையும் கைப்பற்றினர். (எ)

# 4 தோட்டாக்களுடன் கைத்துப்பாக்கி மீட்பு

கொழும்பு, மார்ச். 02

கட்டானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹயாயவத்தை மயானத்துக்கு அருகில் உள்ள உட்பாதை ஒன்றில் புதருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றும் 4 தோட்டாக்களும் கண்டெடுக்கப்பட்டன.

நீர்கொழும்பு பிராந்திய குற்றப்புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் குழுவொன்றினால் நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டது.

ஏதேனும் குற்றச் செயலைச் செய்வதற்கு இந்த ஆயுதம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததா என்பது குறித்து கட்டானை பொலிஸாரும் நீர்கொழும்பு பிராந்திய குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வெளிநாட்டு சிகரெட்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 02

54 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வந்த ஒருவர், நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் தல்துவ பகுதியைச் சேர்ந்த 21 வயது வர்த்தகர் என்று தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவர் கொண்டு வந்த இரண்டு பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 36, 000 வெளிநாட்டு சிகரெட்கள் இதன்போது கைப்பற்றப் பட்டன. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹற்றனில் குடிநீர் பிரச்னை பெரும் மோதலாக மாறியது

## குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு! மூவர் விளக்கமறியலில் வைப்பு

நுவரெலியா, மார்ச். 02

ஹற்றன், ருவன்புர பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட பெரும் மோதலில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதலில் காயமடைந்த 06 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் பலத்த காயமடைந்து கண்டி போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந் தார்.


உயிரிழந்தவர் ருவான்புர பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் எனவும் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் தெரியவந்துள்ளது.

குறித்த மோதலில் காயமடைந்தவர்கள் தற்போது டிக்கோயா ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் உயிரிழந்தவரின் சகோதரரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக, கடந்த 24ஆம் திகதி முதல் இரு தரப்பினருக்கும் இடையே பலமுறை வாக்குவாதங்கள் ஏற்பட்டன. இந்தத் தர்க்கம் மோதலாக மாறியதினாலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மீண்டும் நீண்ட வரிசையில் மக்கள்



திருகோணமலை, மார்ச். 02

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெற்றோல் அடிப்பதற்காக நேற்று முன்தினம் மாலை முதல் நீண்ட வரிசை காணப்படுகிறது.

மத்திய கிழக்கு நாட்டில் ஏற்பட்ட போர்ப் பதற்றம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கிண்ணியா, மூதூர், புல்மோட்டை உள்ளிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன.

எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தில் மக்கள் நீண்ட வரிசையில் காத்துநிற்கின்றனர். (எ-12)

## மட்டக்களப்பு - கல்முனை வீதியில் உழவியந்திரத்தின் மீதேறிய டிப்பர்

### தெய்வாதீனமாக உயிர் தப்பிய சாரதி



மட்டக்களப்பு, மார்ச். 02

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் உழவியந்திரம் ஒன்றின் மீது டிப்பர் வாகனம் ஏறி விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் உழவியந்திரத்தின் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குச் சொந்தமான டிப்பர் வாகனம் ஒன்று களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில் பழுதான நிலையில் நின்றது.

அந்த வாகனத்தை பழுது பார்ப்பதற்காக உழவியந்திரம் ஒன்றின் உதவியுடன் சங்கிலியால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பகுதியில் வீதியில் சென்றுகொண்டிருந்த போது, பின்னால் இழுத்து வரப்பட்ட டிப்பர் வாகனம் எதிர்பாராத விதமாக வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் முன்னால் சென்ற உழவியந்திரத்தின் மீது ஏறியுள்ளது.

டிப்பர் வாகனம் தனது இயந்திரத்தின் மீது ஏறுவதைக் கண்ட உழவியந்திர சாரதி, சாமர்த்தியமாக கீழே குதித்து உயிர் தப்பியுள்ளார்.

இதனால் அவர் எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பினார். எனினும், இந்த விபத்தினால் உழவியந்திரம் பலத்த சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார், விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வாகனங்களை இழுத்துச் செல்லும்போது போதிய பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா? என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது. (எ)


# கொத்மலையில் கூடாரங்களில் வாழ்ந்துவரும் பெருமளவு மக்கள்

## நிரந்தர வீடுகளை கட்டித்தர கோரிக்கை

நுவரெலியா, மார்ச். 02

டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட கொத்மலை - ரம்பொடை, வெவண்டன் தோட்டத்தில் வசிக்கும் 25 குடும்பங்கள் தற்காலிக தங்குமிடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மோசமான காலநிலை நிலவி மூன்று மாதங்கள் கடந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தங்களுடைய சொந்த வீடுகளை விட்டு வெளியேறி இரண்டு மாதங்களாக அதே தோட்டத்தில் தற்காலிக கூடாரங்களில் வசித்து வருகின்றனர்.



பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகையில், "டித்வா" புயல் தாக்கி எங்கள் தோட்டத்தின் ஒரு பகுதி வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட பிறகு, சுமார் ஒரு மாதமாக பொது இடங்களிலும், தோட்டத்தில் உள்ள ஆலயங்களிலும் வசித்து வந்தோம். பின்னர் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் 25 குடும்பங்களை இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடத்தில் தற்காலிக கூடாரங்களை தயாரித்து தங்க வைத்துள்ளனர்.

எனினும், தற்போது இடைக்கிடையே மழை பெய்து வருகிறது. அத்துடன், அதிக காற்று வீசும் போதும் கூடாரங்களில் தொடர்ந்து தங்குவது சாத்தியமற்றது என்றும், தற்போதைய அரசாங்கம் புதிய வீடுகளை கட்டித் தருவதாக உறுதியளித்துள்ளது.

அந்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

வரும் நாட்களில் கொத்மலை பகுதியில் பலத்த காற்று மற்றும் கனமழை பெய்யும் அபாயம் இருப்பதால், மீண்டும் ஒரு அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் தமக்கான நிரந்தர வீடுகளும் இல்லாமல், தற்காலிக வசிப்பிடத்தில் அடிப்படை வசதிகளும் இல்லாமலும் பெரும் துயரங்களுக்கு மத்தியில் வாழும் எமக்கு விடிவையும், உடனடியாக தமது வீடுகளை முழுமைப்படுத்தி தருவதற்கு அரசியல்வாதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ)

## மக்கள் கருத்தறியும் காலப்பகுதி நிறைவு

கொழும்பு, மார்ச். 02

பயங்கர வாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் நோக்கில் அரசாங்கத்தினால் புதிதாக முன்மொழியப்பட்ட பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பான பொதுமக்கள் கருத்தறியும் காலப்பகுதி நேற்று முன்தினம் சனிக்கிழமையுடன் நிறைவடைந்தது.

இதற்கமைய இப்புதிய சட்ட வரைவு தொடர்பான யோசனைகள் மற்றும் கருத்துக்களை அனுப்பிவைப்பதற்கு பொதுமக்களுக்கு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரை இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அவ்வரைவு தொடர்பில் மனித உரிமைகள் அமைப்புகள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகள், தனியார் நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினராலும் கூட்டாகவும், தனித்தனியாகவும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் அனுப்பிவைக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினத்துடன் இந்தக் கருத்தறியும் காலப்பகுதி நிறைவுக்கு வந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி, ரணில்...

குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு, கடிதம் ஒன்றின் ஊடாக இதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக, சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதற்கமைய, ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவால் பெயரிடப்பட்டவர்களில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் பிரதமராக செயற்பட்ட ரணில் விக்ரமசிங்க, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் காவல்துறை மாஅதிபர் பூஜித் ஜெயசுந்தர, முன்னாள் பொலிஸ் சிரேஸ்ட அதிகாரிகளான சிசிர மெண்டிஸ், நிலந்த ஜெயவர்தன, நந்தன முனசிங்க, லலித் பத்திநாயக்க, தேசபந்து தென்னக்கோன், வசந்த விக்ரமசிங்க, பி.எல். பெரேரா மற்றும் ஏ.எஸ். லத்தீப் ஆகியோர் அடங்குவர்.

இந்த நிலையில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

தமது பரிந்துரைகளுக்கு அமைய, விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு குறித்த கடிதத்தின் ஊடாக அறிவுறுத் தப்பட்டுள்ளது. (அ)

## ஈரானின் முன்னாள்...

வெளியிட்டுள்ளன.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானின் கிழக்குப் பகுதியில் உள்ள நர்னக் மாவட்டத்தில் அமைந்துள்ள அஹ்மதிநிஜாத்தின் இல்லத்தைக் குறிவைத்து சனிக்கிழமை இரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 69 வயதான மஹ்மூத் அஹ்மதிநிஜாத் மற்றும் அவரது மெய்க்காப்பாளர்கள் உயிரிழந்துள்ளதாக ஈரானின் ஐ.எல்.என்.ஏ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் ஈரானில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் மற்றும் ஆட்சி கவிழ்ப்பு முயற்சியைத் தொடர்ந்து, அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்த இடத்தைத் துல்லியமாகக் கண்டறிந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மஹ்மூத் அஹ்மதி நிஜாத் 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ஈரானின் ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

தனது பதவிக்காலத்தில் இஸ்ரேலுக்கு எதிரான கடுமையான கருத்துக்கள் மற்றும் ஈரானின் அணுசக்தித் திட்டத்தை தீவிரப்படுத்தியமைக்காக அவர் சர்வதேச அளவில் அறியப்பட்டவர்.

2023 ஆம் ஆண்டில் அமெரிக்கர்களால் சிறைபிடிக்கப்பட்டவர்களைத் தவறாக நடத்திய குற்றச்சாட்டின் கீழ் இவர் மீது அமெரிக்கா தடைகளை விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஊடகவியலாளர்கள்...

காலத்தில் பெரும் எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் தஞ்சம் கோரி வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். ஊடகவியலாளர்கள் கொலைகள் குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்றை அரசாங்கம் நியமித்து உண்மையைக் கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வலியுறுத்தினார்.

ஹக்கீமின் கோரிக்கையை ஆதரித்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனும் பேசினார்.

நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் உட்பட பல அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டு பாரதி இராஜநாயகத்தை. ஊடகத்துறைப் பணியை பாராட்டி நினைவு கூர்ந்தனர். (அ)

## மக்களின்...

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர், வடக்கு மாகாணத்தை நோக்கிப் பல முதலீட்டாளர்கள் வருகை தருகின்றனர்.

ஆனால், அவர்கள் தமக்கான முதலீட்டு அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் இன்றும் பல அதிகாரத்துவச் சவால்களை எதிர்கொள்கின்றனர். அனுமதிகளைப் பெற்றுக்கொடுக்கும் செயன்முறையை நாம் விரைவுபடுத்தாவிட்டால், முதலீட்டாளர்கள் விரக்தியடைந்து திரும்பிச் செல்லும் நிலையே ஏற்படும். எனவே, இந்த அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் சுற்றாடல் அமைச்சின் கீழான நிறுவனங்கள் ஏற்படுத்தும் தாமதங்கள் மற்றும் தடைகள் இயலுமான வரை விரைவாகக் களையப்பட வேண்டும். சுற்றாடல் அமைச்சின் கீழான வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன வடக்கு மாகாணத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றன.

போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்திருந்த காலகட்டத்தில், அவர்கள் மீளத் திரும்புவதற்கு முன்னதாகவே எவ்வித களநிலை ஆய்வுகளோ அல்லது மக்கள் கலந்துரையாடல்களோ இன்றி, வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் மக்களின் காணிகள் இத்திணைக்களங்களால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

இதற்குத் தீர்வு காணும் நோக்கில் தற்போதைய அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அந்தச் செயன்முறைகளை மேலும் துரிதப்படுத்தி, மக்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதார நிலங்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் திண்மக் கழிவகற்றல் என்பது தற்போது பெரும் சவாலாக மாறியுள்ளது. அதற்கான நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் சுற்றாடல் அமைச்சின் கீழான நிறுவனங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், வட மாகாணத்தின் தற்போதைய நிலைமை மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, இந்தச் சட்டவரைவு திருத்தம் தொடர்பான உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை அனைவரும் முன்வைக்க வேண்டியது அவசியமாகும், என தெரிவித்தார்.

இந்த விசேட கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீபவானந்தராஜா, யாழ். மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழான திணைக்களங்களின் மாவட்ட, மாகாண மட்ட அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

## எரிபொருள்...

இந்நிலை தொடர்ந்தால் மசகு எரிபொருள் பீப்பாய் ஒன்றின் 100 டொலரைத் தாண்டக்கூடும் என ஆய்வாளர்கள் எச்சரித்திருந்தனர்.

இதனையடுத்து, ஒஸ்ரியாவிலுள்ள ஒபெக் அமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் நாளொன்றுக்கான உற்பத்தியை 4 லட்சத்துப் 11 ஆயிரம் பீப்பாய்கள் வரை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியா, ரஷ்யா, ஐக்கிய அரபு இராச்சியம் உட்பட 8 நாடுகள் இந்தக் கூட்டத்தில் உற்பத்தி அதிகரிப்புக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தின.

சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் ஏற்கனவே உற்பத்தியை அதிகரித்துள்ளதானால், ஒபெக் அமைப்பின் இந்த கூட்டு நடவடிக்கை மூலம் உலகளாவிய எரிபொருள் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை -

சர்வதேச எரிசக்தி விநியோகத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கும் ஹோர்முஸ் நீரிணையை மூடும் திட்டம் ஈரானிடம் தற்போது இல்லை என அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

அல் ஜசீரா ஊடகத்திற்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், “ஹோர்முஸ் நீரிணையை மூடும் நோக்கம் தற்போதைய நிலையில் ஈரானுக்கு இல்லை” எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

இந்தக் கட்டத்தில் நீரிணையில் கப்பல் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான எந்தவொரு திட்டமும் ஈரானிடம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ)

## மத்திய...

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே தற்போது நிலவி வரும் பதற்றமான போர்ச் சூழல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், “வல்லரசு நாடுகளுக்கு இடையிலான ஒவ்வொரு மோதலின் அதிர்வையும் இலங்கை போன்ற சிறிய நாடுகள் உணர்கின்றன” எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ரீதியில் வர்த்தகம், எரிசக்தி மற்றும் விநியோகக் கட்டமைப்புக்களில் ஏற்படும் பாதிப்புகள், இலங்கையில் வாழ்வாதாரம், சந்தை நிலவரம் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் கடந்த கால யுத்த அனுபவங்களை நினைவுகூர்ந்துள்ள நாமல் ராஜபக்ஷ, வன்முறையின் அனைத்து வடிவங்களையும் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திர ரீதியிலான தீர்வுகளே நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச நெருக்கடிகளினால் ஏற்படக்கூடிய அபாயங்களைக் கணித்து, அவசரகாலத் திட்டங்களை அரசாங்கம் வலுப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிராந்திய ரீதியிலான ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதே சிறந்த வழி எனவும் நாமல் ராஜபக்ஷ தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## வெளிநாட்டு...

திட்டமிடப்பட்ட உள்நாட்டு ஒத்திகைகளின் ஒரு பகுதி என்று கூறியுள்ளது.

விமானப்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

இலங்கை விமானப்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டங்கள் மார்ச் 2ஆம் திகதி கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் நடைபெறும் முக்கிய விமானப்படை நாள் அணிவகுப்புடன் தொடங்கும்.

மார்ச் 6 முதல் 8 ஆம் திகதிவரை இரத்மலானை விமானப்படை தளத்தில் ஒரு பொது விமான கண்காட்சி நடைபெறவுள்ளது. (அ)

## மனித உரிமை...

முன்னெடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நோர்வே பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின்போது, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ்பென் பார்த் ஐடே இலங்கையின் நிலைவரம் குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார ஊடகங்களுக்கு விசேட விளக்கமளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட கடந்த காலப் பிரச்சினைகள் குறித்துச் சட்ட ரீதியான விசாரணைகள் துரிதப்படுத்தப்படும். இதில் அரசியல் தலையீடுகள் எவையும் இருக்காது. உண்மைகளைக் கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் தேசிய மக்கள் சக்தி அரசு உறுதியாக உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் வசமுள்ள மக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும். மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கம் எமது அரசுக்கு இல்லை. இராணுவமயமாக்கல் தொடர்பான கவலைகளுக்குச் செயல்முறை ரீதியான தீர்வுகள் எட்டப்படும்.

வடக்கு - கிழக்கில் மதத் தலங்கள் தொடர்பாக நிலவும் சர்ச்சைகள் மற்றும் மத உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் குறித்து அரசு விசேட கவனம் செலுத்தி வருகின்றது. அனைத்து இன மக்களும் எவ்வித அச்சமுமின்றித் தமது மதங்களைப் பின்பற்றுவதற்கான சமத்துவமான சூழல் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச சமூகம் எழுப்பும் நியாயமான கேள்விகளைப் புறக்கணிக்காது, அவற்றுக்கு உரிய முறையில் பதிலளிக்கப்படும். குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும், சர்வதேச இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

யுத்தத்தால் ஏற்பட்ட வடுக்களை ஆற்ற வேண்டியதும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பதிலளிக்க வேண்டியதும் அரசின் தார்மீகப் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டிய நீதி அமைச்சர், இதற்காக ஏற்கனவே உள்ள பொறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டு, தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்-என்றார். (அ)

## ஈரானில் உள்ள...

சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, தனது உத்தியோகபூர்வ “எக்ஸ்” தளத்தில் பதிவிட்டுள்ள அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவரது பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“ஈரானில் தற்போது ஏற்பட்டுள்ள தீவிர இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக, அங்கு வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. அவர்களின் உயிரைப் பாதுகாக்கவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இலங்கை அரசு உடனடியாக இராஜதந்திர ரீதியிலான மற்றும் அவசரகால பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

மத்திய கிழக்கில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் நலன் கருதி அரசு கூடுதல் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.” - என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## எரிபொருள் பதுக்கலை...

ஈடுபட்டுள்ளனர். இதற்காக நாடு தழுவிய ரீதியில் விசேட புலனாய்வுத் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பதுக்கல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் அல்லது அதற்குத் துணைபோகும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கான்கள், போத்தல்களில் எரிபொருள் வழங்கப்படாது

## மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை என்கிறது பொலிஸ்

கொழும்பு, மார்ச் 02

எரிபொருளைக் கொள்கலன்களில் நிரப்புதல், சட்டவிரோதமாகப் பதுக்குதல், அதிக விலைக்கு மறு விற்பனை செய்தல் மற்றும் எரிபொருள் கையிருப்பு தொடர்பாக சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களைப் பரப்புதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற நிலமை காரணமாக இலங்கையில் எரிபொருள் விதியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை அடுத்து பொலீஸ் ஊடகப் பிரிவு பொது மக்களுக்கு விடுத்துள்ள அறிவித்தலிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

நாட்டில் போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகவும், பொது மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது.

ஆனாலும், சில தனிநபர்கள் மற்றும் குழுக்கள் கான்கள், பீப்பாய்கள் மற்றும் பிற வெளிப்புற கொள்க லன்களில் எரிபொருளைச் சேகரித்து செயற்கைத் தட்டுப்பாடொ ன்றை ஏற்படுத்துவதாகப் பொலிஸ் திணைக்களம் அறிகிறது.

இதனால், எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகங்களுடன் ஒருங்கிணைந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, மறுஅறிவித்தல் வரை, மீன்பிடிக் கப்பல்கள், தொழிற்றுறை செயற்பாடுகள், பணியிடங்கள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் அத்தியாவசிய சட்டப்பூர்வ தேவைகளைத் தவிர, கான்கள், போத்தல்கள் அல்லது வேறு எந்த கொள்கலன்களிலும் எரிபொருளை விநியோகிக்கக்கூடாது என்றும், எரிபொருளைக் கொள்கலன்களில் நிரப்புதல், சட்டவிரோதமாகப் பதுக்குதல், அதிக விலைக்கு மறு விற்பனை செய்தல் மற்றும் எரிபொருள் கையிருப்பு தொடர்பாக சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களைப் பரப்புதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப் ப ட்டுள்ளது. (ஒ)

# குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 13 பேர் பொலிஸாரினால் யாழில் கைது!



யாழ்ப்பாணம், மார்ச் 02

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இரண்டு பெண்கள் உள்ளிட்ட 13 பேர் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸாரால் நேற்று முன் தினம் கைதுசெய்யப் பட்டனர்.

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

யாழ்.நகரில் மருந்தகம் ஒன்றை உடைத்து இரண்டு இலட்சம் ரூபா பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை கொள்ளையடித்த ஒருவரும், நெடுங்குளம் பகுதியில் வீடு உடைத்து நான்கரை இலட்சம் ரூபாய் கொள்ளையடித்த இருவர் உள்ளிட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மேலும் மூன்று பேரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மேலும் போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# யாழ். எரிபொருள் நிலையங்களில் நேற்றும் நீண்ட வரிசையில் மக்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 02

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து, யாழ். மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில், மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில், மக்கள் எரிபொருளை பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்தனர். அந்தவகையில், நேற்று முன் தினமும் நேற்றும் மக்கள் வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனினும் யாழ். மாவட்டத்திற்கு தேவையான பெற்றோல் கையிருப்பில் உள்ளதாகவும், மக்கள் செயற்கைத் தட்டுபாட்டை தவிர்க்கவேண்டும் எனவும், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். (அ)

# எரிவாயு தட்டுப்பாடு நீங்கவில்லை

கொழும்பு, மார்ச் 02

நாட்டில் சமையல் எரிவாயு விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும், சந்தையில் எரிவாயுவைப் பெற்றுக்கொள் வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

போதுமான அளவு எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் துறைசார் அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டாலும், சில்லறை விற்பனை நிலையங்களில் “எரிவாயு இல்லை” என்ற பதிலே கிடைப்பதாக நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

வீடுகளில் சமையல் எரிவாயு தீர்ந்துள்ள நிலையில், மாற்று வழியின்றி உணவகங்களிலிருந்து உணவைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குப் பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது நடுத்தர வர்க்கக் குடும்பங்களின் நாளாந்தச் செலவுகளைப் பாரியளவில் அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள நுகர்வோர் உரிமைப் பாதுகாப்பு தேசிய இயக்கத்தின் தலைவர், “நுகர்வோர் முறையான வைப்புத் தொகையை செலுத்தியே எரிவாயு கொள்கலன்களைப் பெற்றுள்ளனர். எனவே, அவர்களுக்குத் தடையின்றி எரிவாயுவை வழங்க வேண்டிய சட்டரீதியான பொறுப்பு எரிவாயு நிறுவனங்களுக்கு உண்டு” என வலியுறுத்தியுள்ளார். (அ)

# மாணிக்கக்கல் அகழ்வு மஸ்கெலியாவில் ஒருவர் கைதானார்

மஸ்கெலியா, மார்ச். 02

நுவரெலியா- மஸ்கெலியா பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை, மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகளால் பிரவுன்ஸ்விக் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, கைது செய்யப்பட்ட நபர் மஸ்கெலியா பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மன்னார் சிவில் அமைப்புகளுடன் கஜேந்திரகுமார் எம்.பி. சந்திப்பு

மன்னார், மார்ச் 02



மன்னார் மாவட்ட சிவில் அமைப்புகளுக்கும் தமிழ்த் தேசிய பேரவைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இடையே மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மன்னர் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை மார்கஸ் அடிகளார் உட்பட பல சிவில் சமூகத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலில் ஏக்கிய ராஜ்ஜய அரசியலமைப்பு நிராகரிப்பும் சமஷ்டி அரசியல் அமைப்பை வலியுறுத்துதல் தொடர்பாகவும் தலைவர் கஜேந்திரகுமாரால் விளக்கமளிக்கப்பட்டது.

குறிப்பாக இனப் பிரச்னைக்கு தீர்வு என்ற அடிப்படையில் அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள 2015 இற்கும் 2019 இற்கும் இடையில் தயாரிக்கப்பட்ட வரைவை அடிப்படையாகக் கொண்டு புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள அரசியல் யாப்பு வரைவானது ஏக்கிய இராஜ்ஜிய வரைவு என்பதும் அந்த ஒற்றையாட்சி வரைவின் ஆபத்துக்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்ட நிலையில் அந்த வரைவு நிராகரிக்கப்பட வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

அதற்கு மாற்றாக தமிழர்களின் அரசியல் தீர்வாக தமிழரின் தேசம், இறைமை, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான ஒரு சமஷ்டித் தீர்வை தமிழ் தரப்பு முன்வைக்க வேண்டிய நிலையில் அவ்வாறான ஒரு பொது வேலைத் திட்டத்தில் சிவில் அமைப்புக்களும் அரசியல் தரப்புக்களும் இணைந்து பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய தன் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் கடந்த 15.2.2026 அன்று யாழ்ப்பாணம் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சிவில் அமைப்புகளும் அரசியல் தரப்புக்களும் ஒன்று கூடி கலந்துரையாடப்பட்டு கூட்ட முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டது.

குறித்த அரசமைப்பு யோசனையை திம்பு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிப்பது என்றும் இணங்கப்பட்டது.

மன்னார் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டவர்கள் அந்த பொதுச் சபையில் இணைந்து கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. (அ)

# பருத்தித்துறை கடலில் நேற்று இளம் மீனவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 02

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை கடலில் தொழிலுக்கு சென்ற இளம் மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடலுக்குச் சென்ற தொழிலாளியின் படகின் இயந்திரத்தில் தூண்டில் கயிறு சிக்கியுள்ளது. அதனை சீர்செய்ய முற்பட்ட போது கடலில் வீழ்ந்து காணாமல்போனதாகக் கூறப்படுகிறது.

பின்னர் அவருடன் சென்ற சக தொழிலாளி தகவல் வழங்கியதைத் தொடர்ந்து பருத்தித்துறை கொட்டடிப் பகுதி மீனவர்கள் சுமார் 25 இற்கு மேற்பட்ட படகுகளில் தேடுதல் நடத்திச் சடலத்தை கண்டுபிடித்து நேற்று காலை கரை சேர்ந்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட தொழிலாளி பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த 23 வயதான விஜயகுமார் நிக்சன் என்ற ஒரு குழந்தையின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.03.2026 அன்று